பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 09 2026 FRIDAY 6 45 தலைப்புச் செய்திகள்

1. இந்தியா-பெல்ஜியம் இடையே வர்த்தகம் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு நவீன தொழில்நுட்பத்தின் அவசியத்தை மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ்கோயல் வலியுறுத்தியுள்ளார்.

3. அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கை கோள் இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

4. பட்டாசு ஆலைகளில் முறையான பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று
பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 137 ரன் வித்தியாசத்தில் ஹாங்காங்கை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா-பெல்ஜியம் இடையே வர்த்தகம் பாதுகாப்பு, தூய்மை எரிசக்தி, அரிய வகை கனிமங்கள், செமி கண்டக்டர், ஆராய்ச்சி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு வலுப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை இரு மடங்காக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பான தடையற்ற வர்த்தகம், இருநாடுகளுக்கும் இடையே வர்த்தக வாய்ப்புகளை திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நம்பிக்கை, திறமை மற்றும் மாற்றத்தின் அடிப்படையில் நாட்டின் வளர்ச்சி அமைந்துள்ளது என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச கணக்காளர்கள் கூட்டமைப்பின் நிர்வாகக் குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர் இவ்வாறு கூறினார்.

வர்த்தக நிறுவனங்கள், மக்கள் மற்றும் அரசுகளுக்கு இடையே நம்பிக்கையை வளர்ப்பதில் பட்டயக் கணக்காளர்கள் மற்றும் தொழில்முறை அமைப்புக்களின் பங்களிப்பை அவர் சுட்டிக்காட்டினார்.

உலகளவில், உறுதியான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு, தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, புத்தாக்கம் போன்றவற்றின் அவசியத்தையும் திரு பியூஸ் கோயல் வலியுறுத்தினார்.

<<<<>>>>

அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கை கோள் இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்திஷ்தவான் விண்வெளி மையத்திலிருந்து ஜிஎஸ்எல்வி-எஃப் 17 ராக்கெட் மூலம் செலுத்தப்பட்ட இஓஎஸ்-05 செயற்கை கோள் அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நாட்டின் புவிசார் கண்காணிப்பு திறனை வலுப்படுத்துவதுடன் பல்வேறு கண்காணிப்பு சேவைகளுக்கு உதவிடும் வகையில் இந்த செயற்கை கோள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் தெரிவித்துள்ளார்.

2 ஆயிரத்து 360 கிலோ எடைகொண்ட இந்த செயற்கை கோள் விவசாயம், பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட துல்லியமான தரவுகளுக்கு உதவிடும் என்று திரு. நாராணயன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் கோகுலாஷ்டமி இன்று கொண்டாடப்படுகிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்த தினத்தை கிருஷ்ண ஜெயந்தி, கோகுலாஷ்டமி, ஜென்மாஷ்டமி என பல்வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த தினத்தில் பக்தர்கள் தங்களது வீடுகளில் சிறப்பு அலங்காரம் செய்து பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு பூஜைகள் செய்து வழிப்படுகின்றனர்.

நாடு முழுவதும் உள்ள வைண திருக்கோயில்களில் சிறப்பு பூஜைகளும் நடைபெறும்.

இத்தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர், மக்களவை தலைவர் உள்ளிட்ட பலர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி, திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் போதனைகள் இந்திய கலாச்சாரம் மற்றும் தத்துவப் பாரம்பரியத்துக்கு புத்துயிர் ஊட்டும் வகையில் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் உபதேசிக்கப்பட்ட பகவத் கீதை, கடமை, அறம், நீதி, அறிவு, துணிச்சல் ஆகிய பண்புகளை போதிக்கும் காலத்தால் அழியாத வழிகாட்டியாக திகழ்கிறது என்று திரு. ஓம் பிர்லா குறிப்பிட்டார்.

<<<<>>>>

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிடிழந்தவர்களின் எண்ணிக்கை 2-ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த தொழிலாளி சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்ச ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க முதலமைச்சர் திரு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

பட்டாசு ஆலைகளில் முறையான பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று

பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சிவகாசியில் இயங்கி வந்த பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட தீ விபத்தில் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளது ஆழ்ந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற விபத்துக்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் அனுமதி பெறாமல் இயங்கும் தொழிற்சாலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

அனைத்து தொழிற்சாலைகளும் மாசுக்கட்டுப்பாட்டு கட்டுப்பாட்டு சட்டங்களின் கீழ் உரிய அனுமதி பெற்று இயங்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அந்த வாரியம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*எனினும் மாநிலத்தின் சில பகுதிகளில், சாயம் மற்றும் சலவை சார்ந்த தொழிற்சாலைகள் உரிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காமலும், முறையான அனுமதி பெறாமலும் இயங்கி வருவதாக தொடர்ந்து புகார்கள் வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*எனவே கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் வகையில் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து, உரிய அனுமதி பெற்றப்பின் இயக்க வேண்டுமென்று மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

<<<<>>>>

*தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டிய மாவட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை விழுப்புரம், கடலூர், சேலம் உள்ளிட்ட தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பரவலாக இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.*

*தமிழகத்தின் உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இயல்பைட் காட்டிலும் இரண்டு முதல் மூன்று டிகிரி செல்ஸியஸ் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.*

*சென்னை மற்றும் புறநகரைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரில் ஒருசிலப் பகுதிகளில் இன்றும், நாளையும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.*

<<<<>>>>

*யுக்ரைனுக்கு உதவிடும் ஐரோப்பிய நாடுகளின் செயல்பாடுகளுக்கு பதிலடி தரும் வகையில், ரஷ்யாவில் உள்ள ஜெர்மனியின் கலாச்சார மையங்களை மூட முடிவு செய்யப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.*

<<<<>>>>

*ஸ்பெயினின் Canary தீவை ஒட்டிய கடற்பகுதியில், படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.*

<<<<>>>>

*திரிபுராவிலிருந்து 18 மெட்ரிக் டன் அரிசி ஆஸ்திரியா மற்றும் நெதர்லாந்து நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.*

<<<<>>>>

*மறுசுழற்சி செய்யப்பட்ட ஜவுளிகளின் கொள்முதலை ஊக்குவிக்கும் வகையில், அரசின் மின்னணு சந்தை மற்றும் ஜவுளி குழுமம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.*

<<<<>>>>

*மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் தொழில்முனைவோராக உருவெடுக்க தேவையான தொடக்கக்கட்ட நிதியுதவியை மாநில அமைச்சர் திரு மதன் ராஜா வழங்கினார்.*

<<<<>>>>

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக நடைபெற்றுவந்த அரசு பள்ளி மாணவ-மாணவியருக்கான கலை திருவிழா போட்டிகள் நேற்று நடைபெற்றது.*

<<<<>>>>

*திருவள்ளூர் மாவட்டத்தில் முதுகு தண்டுவட பாதிப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மூன்று சக்கர வாகன பேரணியை ஆட்சியர் திருமதி கவிதா தொடங்கி வைத்தார்.*

<<<<>>>>

*நாமக்கல் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் நீர் ஆதாரங்களை பாதுகாக்கும் வகையில், விநாயகர் சிலைகளை குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் மட்டும் கரைக்குமாறு ஆட்சியர் திரு மதுபாலன் கேட்டுக் கொண்டுள்ளார்.*

<<<<>>>>

*தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளம் கிராமத்தில் காவலர் தினத்தையொட்டி, காவலர் - மீனவர் நல்லிணக்கக் கூட்டம் நடைபெற்றது.*

<<<<>>>>

குறைந்த விலையில் வெங்காயம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நியாயவிலைகள் மூலம் வெங்காய விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 137 ரன் வித்தியாசத்தில் ஹாங்காங் அணியை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 193 ரன் எடுத்தது.

இதனையடுத்து, 194 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஹாங்காங் அணி 16 புள்ளி இரண்டு ஓவரில் 56 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<>>>>

அல்மாட்டி டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Diya Chitale - Yashashwini Ghorpade, Syndrela Das - Sutirtha Mukherjee இணை, காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Diya Chitale - Yashashwini Ghorpade இணை, 11-8, 10-12, 11-6, 11-9, என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் Valeriia SHCHERBATYKH - Maria PANFILOVA இணையை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் Syndrela Das - Sutirtha Mukherjee இணை, 11-8, 11-2, 8-11 11-8, என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் Aray ASHKEYEVA - Nursaya NURMAN இணையை வென்றது.

<<<<>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மின்டன் போட்டியில், இந்தியாவின் Satwiksairaj - Chirag SHETTY இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-17, 22-24, 21-9, என்ற செட் கணக்கில், பிரான்சின் Christo POPOV - Toma Junior POPOV இணையை வென்றது.

<<<<>>>>